| அரையாண்டுப் பொதுத் தேர்வு -2023 | பதிவெண் | 1 | 2 | B | 0 | 9 |
|---|---|---|---|---|---|---|
| XII – மொழிப்பாடம் – தமிழ் | | | | | | |
| நேரம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 90 | | | | | |

பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14 x 1 = 14

1. இலக்கியத்தின் நோக்கம் குறித்து மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டும் இலக்கணநூல்
அ) காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. **பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தன - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) எச்சம்
3. பொருத்துக :
அ) குரங்குகள் - 1. கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2. மேய்ச்சலை மறந்தன
இ) பறவைகள் - 3. குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4. மரங்களில் இருந்து விழுந்தன
அ) 1,3,4,2 ஆ) 3,1,4,2 இ) 3,2,4,1 ஈ) 2,1,3,4
4. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வுசெய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளிச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
5. படிமம் என்பதன் பொருள் ______.
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒளி
6. ஆராய்ந்து சொல்கிறவர்
அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்
7. உடுபதி என்பதன் பொருள்
அ) சந்திரன் ஆ) சூரியன் இ) இராமன் ஈ) சுக்ரீவன்
8. "ஐயாண்டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்" - பயின்று வரும் நூல்
அ) சிலப்பதிகாரம் ஆ) சிந்தாமணி இ) தமிழ்விடுதூது ஈ) மணிமேகலை
9. முச்சந்தி இலக்கியம் என்பது ______.
கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது.
கூற்று 2 : பெரிய எழுத்து புத்தகம் என்று அழைக்கப்படுவது.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1,2 தவறு இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1,2 சரி
10. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள் ______.
அ) ஆய் அண்டிரனும், அதிகனும் ஆ) நல்லியக் கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஆ) பாரியும் காரியும்
11. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்தது உணர்த்தும் திணைகள் முறையே ______.
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை
12. காய் முன் நேர் வருவது
அ) இயற்சீர் வெண்டளை அ) வெண்சீர் வெண்டளை இ) கலித்தளை ஈ) வஞ்சித்தளை
13. தற்காலிக தங்குமிடம் புக்கில் எனக் கூறும் நூல்
அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) பதிற்றுப்பத்து
14. 'கிடை' என்னும் நூலின் ஆசிரியர் ______.
அ) பரலி சு.நெல்லையப்பர் ஆ) தி.சு.நடராசன்
இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) கி.ராஜநாராயணன்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. அணியிலக்கணத்தைக் கூறும் இலக்கண நூல்கள் யாவை?
16. "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" - யார்க்கு?
17. அகநானூற்றின் மூன்று பிரிவுகள் யாவை?
18. எண் வகை மெய்ப்பாடுகள் யாவை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 x 2 = 4

19. பசுமைக்குடில் வாயுக்கள் யாவை?
20. மணந்தகம் என்றால் என்ன?
21. பின்னணி இசை படத்தின் காட்சி அமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்?

பிரிவு - 3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. 7 x 2 = 14

22. *உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :*
எலியும் பூனையும் போல
23. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக :*
தலை, தளை, தழை



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

24. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக:
குமரன் வீடு பார்த்தேன்.
25. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக :
நம் மாநிலத்தில் இந்த ஆண்டு அதிக மலை பெய்தது
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க :
வெங்காயம் (அல்லது) பலகை
27. பொருள் வேறுபாடு அறிந்து ஒரே தொடரில் அமைக்க :
ஊண், ஊன் (அல்லது) புல், புள்
28. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக :
ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகளின் பொந்துகள் அமைந்திருந்தன.
29. விடைக்கேற்ற வினா அமைக்க :
குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.
30. கலைச்சொல் தருக : அ) File ஆ) Affidavit

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 x 4 = 8

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவன யாவை?
33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் வேண்டுவன யாவை?
34. "ஈசன் மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி. 2 x 4 = 8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும். - விளக்குக.
36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
37. சென்னை நகரின் சிறப்புகளை உன் பாடப்பகுதி கொண்டு எழுதுக.
38. இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள நேர மேலாண்மைக் குறித்து வெ.இறையன்பு கூறுவன யாவை?

### பிரிவு - 3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 4 = 12

39. சொற்பொருள் பின்வருநிலையணியை சான்றுடன் விளக்குக. *(அல்லது)*
சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. பாடாண் திணையை சான்றுடன் விளக்குக. *(அல்லது)*
கூதிர்ப்பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக :

*அரசனுக்கும் எனக்கும் ஒரு வழக்குண்டாக*
*அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்ப தேதான்*
*சரியென்றேன்; ஒப்பவில்லை! இவளும் நானும்*
*சாவதென்றே தீர்ப்பளித்தான்; சாக வந்தோம்!*
*ஒருமனிதன் தேவைக்கே இந்தத் தேசம்*
*உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!*
*இருவர் இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்*
*இருப்பதுமெய் என்றெண்ணி இருக்கின் றீர்கள்!* - பாரதிதாசன்

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வொடு பொருத்தி எழுதுக :
அ) யானைக்கும் அடி சறுக்கும் *(அல்லது)* ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.
43. தமிழாக்கம் தருக :
1. A penny saved is a penny gained.
2. A pen is mightier than a Sword.
3. A friend in need is a friend in deed.
4. A new language is a new life.

## பகுதி - IV

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 x 6 = 18

44. அ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களிடம் கொண்டிருந்த உறவின் மேன்மையை விளக்குக. *(அல்லது)*
ஆ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.
45. அ) பண்டைய காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கு இடையே நிகழ்ந்த கற்றல் - கற்பித்தல் முறைகளைத் தொகுக்க. *(அல்லது)*
ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் தொகுத்துரைக்க.
46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. *(அல்லது)*
ஆ) "கோடைமழை" - கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

அடிபிறழாமல் எழுதுக : 4 + 2 = 6

47. அ) *"குழல் வழி நின்றது"* - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.
ஆ) *"மகற்கு"* - என முடியும் திருக்குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com